குன்னம் தொகுதி குமுழியம் கிராமத்தில் 5000 மரக்கன்றுகளுடன் குறுங்காடுகள் அமைக்கும் பணியினை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தொடங்கி வைத்தார்! உடன் வனச்சரக அலுவலர் முத்துமணி, ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், மரங்களின் நண்பர்கள் ஒருங்கிணைப்பாளர் முத்துகிருஷ்ணன், மற்றும் ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள், ஊர் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

வள்ளியரச்சல் கீரனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளில்

கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் இலவச சிறப்பு மருத்துவ முகாம்!

அமைச்சர் .மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்து பார்வையிட்டார்!

கீரனூர், நவ.27-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 25.11.2023 சனிக்கிழமை அன்று தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன் தலைமையில், திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ஒன்றியம், வள்ளியரச்சல் ஊராட்சி, கணபதிபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மற்றும் காங்கேயம் ஒன்றியம், கீரனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் இலவச சிறப்பு மருத்துவ முகாமினை துவக்கி வைத்து மக்களைத்தேடி மருத்துவ திட்டத்தின் கீழ் 09 பயனாளிகளுக்கு மருந்து பெட்டகங்களையும், 11 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினையும், 2 தாய்மார்களுக்கு மகப்பேறு சஞ்சீவி பெட்டிகளையும் வழங்கினார்.

அமைச்சர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் தமிழக மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். முதலமைச்சர் அவர்களிடம் படியூர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்ற கோரிக்கை வைத்தோம். உடனடியாக அதற்கு தீர்வு காணப்பட்டு, இந்த இடத்திலேயே மருத்துவம் பெறக்கூடிய வகையில் ஆரம்ப சுகாதார மையம் அமையவுள்ளது. அதனை தொடர்ந்து, சிவன்மலை ஊராட்சியில் விளையாட்டு மைதானம் மற்றும் உள்விளையாட்டு அரங்கம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் 6 ஏக்கர் இடம் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. குடிநீர் மேல்நிலை தொட்டிகள், சாலை வசதிகள் போன்ற எண்ணற்ற பணிகள் அரசின் சார்பில் செய்யப்பட்டு வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு 4வது முறையாக பொறுப்பேற்ற போது வருமுன் காப்போம் திட்டத்தை கொண்டு வந்தார்கள்.

இத்திட்டத்தின் நோக்கம் மருத்துவமனையில் மட்டுமே மருந்துவர்கள் பணிபுரிவதோடு அல்லாமல் கிராமப் புறங்களுக்கு சென்று வயதானவர்கள், ஆதரவற்றோர்கள் மற்றும் மருத்துவமனைக்கு செல்ல முடி யாதவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் சிறப்பாக பயன்பட்டு வருகிறது. நோய் ஆரம்ப கட்டத்தில் சரி செய்வதால் தான் இது வருமுன் காப்போம் திட்டம் என்றழைக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மருத்துவ முகாம்கள் வட்டார அளவில் நடைபெறும். ஒவ்வொரு முகாமிலும் மருத்துவர், மகப்பேறு மருத்துவர், குழந்தை நல மருத்துவர் உள்ளிட்ட மருத்துவர் குழுக்கள் மூலம் ஏழை எளிய மக்களுக்கு சிகிச்சை அளிக்க ஒரு சிறந்த திட்டமாக உள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

இம்முகாமில் வெள்ளகோவில் வட்டார மருத்துவ அலுவலர் மரு.ராஜலட்சுமி, காங்கேயம் வட்டார மருத்துவ அலுவலர் மரு.முரளி, தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன், மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், வெள்ளகோவில் ஒன்றிய கழக செயலாளர் எஸ்.சந்திரசேகர், காங்கேயம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.கே.சிவானந்தன் நகர கழக செயலாளர்கள் சபரி எஸ்.முருகானந்தம் வெள்ளகோவில், வசந்தம் நா.சேமலையப்பன் காங்கேயம்,

பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை, கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை, கலைவாணர் அரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நேற்று முன்தினம் (25.11.2023) "நிறுவனங்களின் நாயகர் கலைஞர்" சிறப்பு புகைப்பட கண்காட்சியை, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், டி.வி.எஸ். குழுமத்தின் தலைவர் வேணு சீனிவாசன், வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் முனைவர் கோ. விசுவநாதன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பி.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கழக இளைஞரணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவீர்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை, நவ.27-

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி அறிக்கை வருமாறு:

கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் இளம் தலைவர் அவர்களின் பிறந்த நாள் இன்று (27.11.2023-திங்கட்கிழமை) ஆகும். தமிழ் சமுதாயம் தமிழ் மொழி என்கிற உணர்வு பெற்றிட உழைத்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் கொள்கைகளையும், லட்சியங்களையும் உள்ளத்தில் ஏந்தி தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் வழியில் ஓய்வின்றி பணியாற்றி வரும் இளம் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழாவினை மிகுந்த எழுச்சியோடு தி.மு.க. இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு விளக்க பிரச்சாரத்திற்கும், ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல், விளையாட்டு போட்டிகளை நடத்துதல், இரு வண்ணக் கொடியினை உயர்த்தி வைத்து இனிப்புகள் வழங்குதல் என புதுக்கோட்டை

தெற்கு மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் ஈடுபட வேண்டும். மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைகள், வட்டங்கள், வார்டுகள் தோறும் மேற்கண்ட நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத் துறை அமைச்சருமான எஸ். ரகுபதி தனது அறிக்கையில் கூறி உள்ளார்.

கழக இளைஞரணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவீர்!

மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!

புதுக்கோட்டை, நவ.27-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை வருமாறு:

கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் இளம் தலைவர் அவர்களின் பிறந்த நாள் இன்று (27.11.2023-திங்கட்கிழமை) ஆகும். தமிழ் சமுதாயம் தமிழ் மொழி என்கிற உணர்வு பெற்றிட உழைத்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் கொள்கைகளையும், லட்சியங்களை

யும் உள்ளத்தில் ஏந்தி தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் வழியில் ஓய்வின்றி பணியாற்றி வரும் இளம் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழாவினை மிகுந்த எழுச்சியோடு திமுக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு விளக்க பிரச்சாரத்திற்கும், ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல், விளையாட்டு போட்டிகளை நடத்துதல், இரு வண்ணக் கொடியினை உயர்த்தி வைத்து இனிப்புகள் வழங்குதல் என புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் ஈடுபட வேண்டும். மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைகள், வட்டங்கள், வார்டுகள் தோறும் மேற்கண்ட நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தனது அறிக்கையில் கூறி உள்ளார்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதிக்கு வருகை தந்த

அண்ணா மண்டல இருசக்கர வாகனப் பேரணிக்கு உற்சாக வரவேற்பு!

கே.பி.சங்கர் தலைமையில் மாதவரம் எஸ்.சுதர்சனம் - ஜோயல் - வி.இராமநாதன் - இரா.முருகேசன் பங்கேற்பு!

சென்னை, நவ. 26-

சேலத்தில் வருகின்ற டிசம்பர் 17-ஆம் தேதி மாநில உரிமையை மீட்கும் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெற உள்ளதனை தொடர்ந்து மாநில இளைஞரணி மாநாடு குறித்தும், நீட் எதிர்ப்பு விழிப்புணர்வு குறித்தும் கழக தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் கன்னியாகுமரி மாவட்டம் அய்யன் வள்ளுவர் சிலை அருகில் துவங்கப்பட்ட DMK Riders இருசக்கர வாகன பிரச்சாரம் வள்ளுவர் மண்டலம் பெரியார் மண்டலம், அண்ணா மண்டலம், கலைஞர் மண்டலம் என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு 188 வாகனங்களில் வீரர்கள் 234 தொகுதிகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்ணா மண்டலத்தை சேர்ந்த இருசக்கர பிரச்சார வீரர்கள் 6 நாட்கள் தொடர் பயணத்தின் தொடர்ச்சியாக சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்கு வருகை தந்த அண்ணா மண்டல DMK Riders வீரர்களை திருவொற்றியூர் தொகுதிக் கழகத்தின் சார்பில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் தலைமையில் தியாகி சத்திய மூர்த்தி நகரில் சிறப்பான வரவேற்பு வழங்கி வரவேற்றார். வருகை தந்த 75 இருசக்கர பிரச்சார வீரர்களை ஊக்கப்படுத்தும் விதமாக வீரர்களுக்கு பேண்ட் வாத்தியங்கள் இசைக்கப்பட்டு மலர் தூவி, ஆரத்தி எடுத்து வரவேற்றனர்.

மாவட்ட கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜோயல், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், 5வது வட்ட மாமன்ற உறுப்பினர், வட்ட கழக செயலாளர் கே.பி.சொக்கலிங்கம் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்றனர்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ராமநாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், மாமன்ற உறுப்பினர் கோமதி சந்தோஷ்குமார், இ.ரமேஷ், ஆ.பாண்டியன் மாவட்ட பிரதிநிதிகள் கே.கார்த்திகேயன் பி.எஸ்.சைலேஷ், ஆர்.தினேஷ் குமார், எஸ்.மகேந்திரன், எஸ்.ஸ்டாலின் ப.சந்தான கிருஷ்ணன், மலைராஜ், தலைமை கழக பேச்சாளர் வாசு.கருணாநிதி, இளைஞர் அணி நிர்வாகிகள் ஆர்.டி.மதன்குமார், டி.ஜி.ஆர். மணிவண்ணன், வேல் கணேசன், இனியன், சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பால உமாபதி, வர்த்தகர் அணி மாவட்ட துணைத் தலைவர் பிரட் சுரேஷ், அயலக அணி துணை அமைப்பாளர் எம்.கார்த்திக், தொண்டரணி மாவட்ட துணை அமைப்பாளர் தச.எழிலன், கே.தேசிங்கு, எம்.தயாநிதி, எஸ்.கே.இளங்கோ, கலை சரவணன், எம்.எஸ்.ரவி, கலைஞர் நகர் பாபு, எஸ்.செல்வம், ரமேஷ், ஆர்.குமரன், எம்.எல்.வேலன், ஆர்.பாலச்சந்தர், பி.ரமேஷ், அன்னை சிவகாமி நகர் ராஜேந்திரன், பிரேம் குமார், கொள்கை மணி, அசோக்குமார், எஸ்.விஜயராகவன், மணலி குமார், சின்னைசேக்காடு வசந்த ராஜ், திவாகர், ஜே.ஆர்.டி.சேகர், எஸ்.கே.ராஜ், இரா.கணேசன், அன்பரசன், அப்பு, பரணிகுமார், பாலா, சுமன், கார்கில் நகர் கஜா, சரண், அருண், பிரபாகரன், ராஜி தட்சிணாமூர்த்தி, ஆர்.எம்.மணி,

மீன் வினோத், கோபி கிருஷ்ணா, கார்த்திக், அன்பு செல்வம், கே.முனுசாமி, சங்கர், அழகாபுரி கதிர்வேல், சவுந்தராஜன், கண்ணன், சிலோர் மணி, குப்புசாமி, தரணி, பாட்சா, ராஜா, பிரேம், சூசை, பிரகாஷ், வி.ஆல்பர்ட் ட்ரான்ஸ்போர்ட் தினேஷ், குமரன், குப்புசாமி, ரஞ்சித் முனியா, தயா, உதயா, மாரியப்பன் முன்னாள் பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அ.நிர்மல்தாஸ் (எ) தமிழ்இன்பன் மற்றும் மாவட்ட கழக பகுதி கழக வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக தோழர்கள் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு வரவேற்றனர்.

விக்கிரவாண்டி தொகுதியில் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் நடைபெற்ற முண்டியம்பாக்கம் , ஒரத்தூர், தும்பூர், விக்கிரவாண்டி பேரூராட்சி ஆகிய ஊர்களில் நீட் தேர்வை ரத்து செய்வதற்கான கையெழுத்து இயக்கத்தை விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் ஜெ.ஜெயபால், நகர செயலாளர் நயினா முகமது, பேரூராட்சி தலைவர் அப்துல் சலாம், பேரூராட்சி துணை தலைவர் பாலாஜி, மாவட்ட கவுன்சிலர் மீனா வெங்கடேசன், ஒன்றிய கவுன்சிலர் இளவரசி ஜெயபால், பேரூராட்சி கவுன்சிலர்கள் சர்கார் பாபு, சுதா பாக்கியராஜ் , மாவட்ட தொழிளாளர் அணி தலைவர் ஹரிஹரன், மாவட்ட விவசாய அணி தலைவர் பாபுஜிவானந்தம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அன்பரசு, மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் கலைச்செல்வன், ஒன்றிய நிர்வாகிகள் முரளி, வேல்முருகன், சாவித்திரி பாலு, ராம்குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் சாம்பசிவம், பாலாஜி, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி கபிலன், திவாகர், புஷ்பராஜ், விக்னேஷ், ராஜா, ஒன்றிய இளைஞர் அணி பாலகிருஷ்ணன், சங்கர், அன்பு, ஹரி, கிளை செயலாளர்கள் சுதாகர், மோகன், கிருஷ்ணன், ராமலிங்கம், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் - உத்திரமேரூர் - சாலவாக்கத்தில்

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை!

காஞ்சிபுரம், நவ. 26 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் - உத்திரமேரூர், சாலவாக்கம் ஒன்றிய தி.மு.க. சார்பில் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு ஆங்காங்கே 46 அடி நீளம் உள்ள 46 கிலோ எடை கொண்ட கேக் வெட்டி கோலாகலமாக கொண்டாடப்பட்டது. காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கேக் வெட்டி பொதுமக்களுக்கு வழங்கினார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் பேருந்து நிலையம் அருகில் ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன், என்.எஸ். பாரிவள்ளல் தலைமையில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. 46 கிலோ கேக் வெட்டி பொதுமக்களுக்கு வழங்கினார். இதில் டி குமார் தலைமை செயற்குழு உறுப்பினர் இராநாகன் பேரூர் செயலாளர் என் எஸ் பாரிவள்ளல் பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார் உள்ளிட்ட ஒன்றிய . பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

மேலும் சாலவாக்கம் ஒன்றியக் கழகம் சார்பில் கழக இளைஞரணிச் செயலாளரும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டு - சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 46 வது பிறந்த நாள் விழா சாலவாக்கம் பஜார் பகுதியில் நேற்று காலை கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

120 ஆண்டுகள் பழைமயான கும்பகோணம் பரஸ்பர ஸகாயநிதி நிறுவனத்தின் புதிய தலைமை அலுவலகக் கட்டிடத்தை தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளரும், நிதியின் தலைவருமான சு.கல்யாணசுந்தரம் எம்.பி திறந்துவைத்தார். மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர், நிதியின் துணைத் தலைவர் செ.இராமலிங்கம், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர், நிதியின் மூத்த இயக்குனர் சாக்கோட்டை க.அன்பழகன், கும்பகோணம் மாநகர துணை மேயர் சு.ப.தமிழழகன், நிதியின் மேலாண் இயக்குனர் பி.ஆர்.பி வேலப்பன், இயக்குனர்கள் பிரகாசம், துரைராஜ், அம்பிகா, குரு பிரசாத் , நிதியின் பொதுமேலாளர் சுபாஸ் ஆகியோர் உடன் உள்ளனர்.